**Bishop George Rajendran sdb**
Diocese of Thuckalay

ஆயர் சுற்றுமடல்

"With God all things are possible"

Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

**Circular Letter No/GR/47/2023**

ஈசோ மெசிகாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசிகாவிடமிருந்தும் அமைதியும் அருளும், உரித்தாகுக.

அக்டோபர் மாதம் நமது அன்னை மரியாவின் செபமாலையின் நறுமணம் வீசும் மாதம். செபமாலை நாம் செய்வதால் நமக்கு கிடைக்கும் நற்பலன்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

தொடக்ககால திருச்சபையின் தொடக்கத்தில் இருந்து திருத்தூதர்களும் இதர விசுவாசிகளும் விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே செபத்தையும் அருள் நிறைந்த மரியே என்ற வான தூதரின் வாழ்த்துச் செபத்தையும் உருக்கமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். ஆனால் இன்று செபிக்கும் கன்னிமரியின் செபமாலையை கி.பி 1214 இல் தான் புனித தோமினிக் வழியாக அன்னை மரியாள் திருச்சபைக்கு வழங்கினார். அக்காலத்தில் ஆல்பி ஜென்சியன்ஸ் என்ற முரண்பாட்டுக் கொள்கையினர் மனம் மாறி திருச்சபைக்குத் திரும்பி வர வேண்டும் என்று புனித தோமினிக் செபித்து வந்தார். பிரான்ஸ் நாட்டில் உள்ள ஒரு காட்டுக்குள் சென்று பாவிகள் மனந்திரும்ப வேண்டி செபித்தார். மூன்றாம் நாள் செபத் தவத்தின் விளைவால் உணர்வற்ற நிலையில் இருந்தார். அப்பொழுது அன்னை மரியாள் புனித தோமினிக்குக் காட்சி தந்து எதிரிகள் முரண்பாட்டுக் கொள்கையினைக் கைவிடவும், பாவிகளை முறியடிக்கும் ஒரே கருவி செபமாலை என்று கற்றுக் கொடுத்தார்.

அந்த நாளிலிருந்து தனது வாழ்நாள் முழுவதும் புனித தோமினிக் ஜெபமாலையின் புகழையும், பெருமையும் தனது மறைவுரைகளின் வழியாகப் போதித்து அறிக்கையிட்டு வந்தார். செபமாலையில் நாம் செபிக்கும் 150 அருள் நிறைந்த மரியே ஜெபம் 150 திருப்பாடல்களுக்கு சமம் என்பதை மக்களுக்கு அறிவுறுத்தினார் .1917 ஆம் ஆண்டு பாத்திமா நகரில் அன்னை மரியா ஜெசிந்தா, லூஸியா, பிரான்சிஸ்கா என்ற மூன்று பேருக்கும் காட்சி கொடுத்த போது தன்னை செபமாலை அன்னை என்று வெளிப்படுத்தினார்.

செபமாலையில் நாம் பயன்படுத்தும் செபங்களை கவனித்தால், அதன் சிறப்பு நமக்கு புரியும். முதலில் நம்பிக்கை அறிக்கையைச் சொல்வதின் மூலம் நமது நம்பிக்கையை புதுப்பித்துக் கொள்கிறோம். பிறகு இயேசு கற்றுத்தந்த இறை வேண்டலை சொல்கிறோம். இது ஜெபங்களில் எல்லாம் மிக மேலானது ஆகும்.அதன் பின் பத்து முறை நாம் சொல்கின்ற அருள் நிறைந்த மரியே என்ற ஜெபம் விண்ணையும், மண்ணையும் இணைக்க இறைவனால் இறைமகன் ஈசோ அனுப்பப்பட்ட உண்மையை இது நினைவூட்டுகின்றது. மூவொரு கடவுளுக்கு நாம் தரும் இறை புகழ் இறுதியில் அமைந்துள்ளது .12ஆம் நூற்றாண்டில் தான் முதன் முதலில் 150 அருள்நிறைந்த மரியே என்ற செபத்தைச் சொல்லி மக்கள் செபித்தனர் .15

ஆம் நூற்றாண்டில் கத்தூசியன் துறவி ஒருவர் 150 அருள்நிறைந்த மரியே செபத்தை பதினைந்து பத்துகளாக பிரித்தார். ஒவ்வொரு பத்து அருள்நிறைந்த மரியே செபத்திற்கு முன்பு ஈசோ கற்றுத்தந்த இறைவேண்டலை சேர்த்தவரும் அந்த கர்த்தூசியன் துறவி தான். ஜெபமாலையின் திருத்தந்தை என்று அழைக்கப்படும் திருத்தந்தை 13ம் லியோ அக்டோபர் மாதத்தை செபமாலை மாதம் என்று அறிவித்தார்.

இவர் செபமாலை செபிப்பதன் மகத்துவத்தை இவ்வாறு கூறுகிறார் செபமாலை பக்தி முயற்சியில் நாம் பங்கேற்கும் போது மரியன்னையின் அரவணைப்பில் இருக்கிறோம். நம் தாய் மழலைகளுக்கு கற்றுக் கொடுப்பது போல ஒவ்வொரு மறை பொருளாக நமக்கு விளக்கி சொல்கிறார் .இவ்வாறு மரியன்னையின் அரவணைப்பில் அவரை பார்த்த வண்ணம் தமது மீட்பை பற்றிய காட்சி தியானத்தில் பங்கு பெறுகிறோம். செபமாலை என்பது ஒரு ஆற்றல் வாய்ந்த ஆயுதமாக திருச்சபையில் அமைந்துள்ளது. திருதந்தை புனித இரண்டாம் ஜாண்பால் நான் செபித்த செபங்களில் செபமாலை தான் மிகச்சிறந்த செபம் என்றும், செபமாலை பக்தியை நமது விசுவாசத்தின் சிறந்த மறைபொருள், சிந்தனையில் கிறிஸ்தவ வழிகாட்டும் ஒரு புனிதத்தின் உண்மையான பயிற்சி என்று சுட்டிக்காட்டுகிறார். புனித பெர்நார்டு என்பவர் என்னுடைய மறைவுரையை விட நான் செபிக்கும் செபமாலையால் தான் பல ஆன்மாக்களை மனமாற்றம் அடைய செய்துள்ளேன் என்று கூறியுள்ளார். திரு செபமாலை ஆன்மீகப் போரின் ஒரு தனிப்பட்ட ஆயுதமாக இருப்பதுடன் சிறப்பாக உலகம் முழுவதும் அமைதிக்காக செபிக்கும் ஒரு கருவியாகவும் இருக்கிறது .குடும்ப வாழ்வின் அழகும் புனித தன்மையும் பாதிக்கப்படும் போது குடும்ப மதிப்புகளை கெடுக்கும் கருக்கலைப்பு, ஒற்றுமையின்மை, கருத்தடை, குழந்தை பேறு இன்மை மற்றும் விவாகரத்து ஆகியவை குடும்பங்களில் வரும் போது திரு செபமாலை சிறந்த பாதுகாப்பாளராக இருக்கின்றன .

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு பிலிப்பைன்ஸ் நாட்டு சர்வதிகாரி மார்க்கோஸ§க்கு எதிராக லட்சக்கணக்கில் திரண்ட மக்கள் செபமாலைகளோடு தான் நின்றார்கள். பீரங்கிகளும் கனரக ஆயுதங்களும் செபமாலையின் சக்திக்கு முன் அடிபணிந்ததை அன்று உலகம் கண்டது எனவே உலக அமைதிக்காகவும் செபமாலை செபிப்பது அவசியமாக இருக்கிறது மற்ற எல்லாவற்றையும் விட செபமாலை நம்மை புனிதத்திற்கு வழிகாட்டுகிறது. ஒருவர் மற்றவரை அன்பு செய்து வாழவும், கிறிஸ்துவை போல் வாழவும் திரு செபமாலை வழிகாட்டல் செய்கிறது. நமது குடும்பத்தில் குடும்ப அழகு உடைக்கப்பட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டிருக்கும் போது காயங்களை குணமாக்கும் திறனை செபமாலை கொண்டிருக்கிறது. கல்லான இதயத்தை கூட கனிவான இதயமாக மாற்றக்கூடிய அளவுக்கு செபமாலைக்கு ஆற்றல் உள்ளது.

செபமாலை செபிப்பது வழியாக நாம் அன்னை மரியாவின் வழிகாட்டுதலை பெறுவோம். செபமாலை நற்செய்தியின் சுருக்கம். இயேசுவின் பிறப்பு முதல் விண்ணேற்பு வரையுள்ள மறை உண்மைகளை தியானித்து செபமாலை செபிக்கப்படுகின்றது .செபமாலை நாம் ஒவ்வொரு நாளும் செபிக்கும் பொழுது நம் உள்ளத்தின் அமைதியை பெறுகின்றோம் அன்னை மரியாவின் பரிந்துரையை உணர்கின்றோம். நம்முடைய மனதை ஒருமுகப்படுத்தி தியானிக்கின்றோம் இப்பேறு பெற்ற செபமாலையை நாம் கொடையாக பெற்றிருப்பது அன்னை மரியா நம் மீது கொண்ட அன்பின் காரணமாகும். செபமாலை செபிப்பதன் வழியாக அன்னை மரியாள் தொடர்ந்து நமக்கு பரிந்துரை செய்து வருகிறார். புது வாழ்வையும் புது

மாற்றத்தையும் நமக்கு வழங்கி வருகின்றார். எனவே இன்றைய நாளில் செபமாலை செபிக்கும் மக்களாக மாறி புது வாழ்வை பெற்றுக் கொள்ள தேவையான அருளை வேண்டுவோம்.

நமது மறை மாவட்டத்தில் செயல்படும் மரியாயின் சேனை சார்பாக ஒவ்வொரு வருடமும் திருச்செபமாலை பவனி நடத்துவது வழக்கம். இந்த வருடம் நமது மறை மாவட்ட அளவிலான ஜெபமாலை பவனியானது அக்டோபர் மாதம் 29ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு "அன்பினால் அவனி அமைதியுற" என்ற மைய சிந்தனையோடு அதங்கோடு புனித மரிய கொரற்றி ஆலயத்தில் இருந்து தொடங்கி படந்தால்மூடு இயேசுவின் திருஇருதய ஆலயம் வரை நடைபெற உள்ளது. இத்திரு செபமாலை பவனியில் அனைத்து அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் இறைமக்கள் அனைவரும் தவறாமல் கலந்துக்கொண்டு அன்னையின் பரிந்துரைய வழியாக இறை ஆசீரை நிறைவாக பெற்றுக்கொள்ள உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு அக்டோபர் மாதம் 31ஆம் தேதி உங்கள் ஆலயத்தை சுற்றி செபமாலை பவனி நடத்தவும் கேட்டுக்கொள்கிறேன். இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

**சிறுமலர் மிஷன் லீக் Rally**

சிறுமலர் மிஷலீக் சார்பில் நடத்தப்படும் Rally நவம்பர் மாதம் 26 ஞ்சாயித்துக்கிழமை மறைவட்ட அளவில் நடைபெறுகிறது. அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். மாணவ மாணவிகள் , அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள் மற்றும் மறைக்கல்வி ஆசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவேண்டும்.

ஆயர் இல்லம்
20-10-2023

என்றும் ஈசோ மிசிகாவில்

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர

---

இச்சுற்றுமடலை 22.10.2023 ஞயிற்றுக்கிழமை அனைத்துபங்குகள் மற்றும் சிற்றாலயங்களில் வாசிக்க வேண்டும்